
# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed Journal Multidisciplinary)

ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:8 Issue :30 April 2026

கோட்டை:8 வாயில்:30 ஏப்ரல் 2026

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department  of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,
Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of  Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

அரண்
பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran
International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**Dr B. DHANANJAYAN**
Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet, Chennai - 600 021.

**Dr P.SEKAR**
Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

**நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்**
**இதழாக்கம்**
**திரு ப. ஜெயகிருஷ்ணன்**
**முதன்மை ஆசிரியர்**
**முனைவர் பிரியாகிருஷ்ணன்**
**+917299587879**
www.aranejournal.com
aranjournal@gmail.com

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# நாமக்கல் கவிஞர் பனுவல்களில் சமுதாயச் சிந்தனைகள்
# *Social Thoughts in the poems of Namakkal Kavignar*

**செ.ரேணுகா** *(Ref.No.:BDU2110632779347/Confirm./Dt:24.05.2024)*
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, அரசினர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), கும்பகோணம்-612 001, தமிழ்நாடு, இந்தியா (பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது)
***S.RENUKA*** *(Ref.No.: BDU2110632779347/Confirm./Dt:24.05.2024)*
*Research Scholar, Department of Tamil, Govt. Arts College for Women (Autonomous), Kumbakonam-612 001, Tamil Nadu, India (Affiliated to Bharathidasan University)*
*ORCiD: https://orcid/org/0009-0002-3233-3574*
**முனைவர் ப.செந்தில்குமாரி,** ஆய்வு நெறியாளர் - இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை,
அரசினர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), கும்பகோணம்-612 001, தமிழ்நாடு, இந்தியா
(பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது)
***Dr. P.Senthilkumari, Research Advisor*** — *Associate Professor, Department of Tamil,*
*Govt. Arts College for Women (Autonomous), Kumbakonam-612 001, Tamil Nadu, India*
*(Affiliated to Bharathidasan University)*
*ORCiD: https://orcid.org/0009-0004-7939-4926*

***Abstract***

*V. Iramalingam Pillai was the poet of Vidivelli Namakkal of the liberation movement in the twentieth century. He admired nationalism and Gandhianism as his two eyes. He was a versatile personality as national poet, Gandhian poet and court poet. Inspired by the revolutionary ideas of social reformers such as Bharatiyar, Rajaram Mohan Roy, Ramakrishna Paramahamsar, and Vivekananda, he created many poems to reform the society by adhering to the motherland and mother tongue. In his poems he brought out in his poems the actions to change the disorderly and disorderly patterns prevailing in society such as caste, superstition, alcohol, education and handicrafts. Caste is a human caste among the people who have caused many violence in the name of caste. There is no untouchability within such a caste. He said that the disease of untouchability should be banished from this country. They lived happily as wives and people because the animal named Madhu entered them and they were suffering and suffering day by day without porridge. In order to reform the lower caste people, he went on a strike to ban the sale of fakes sold in corners and was successful. He gave advice and encouragement to the people who forgot reason and fell into the abyss of superstition. Education is one of the basic needs of the country. Such education should be taught equally without discrimination between men and women. He said that no other evil should come during the period of education except academic thinking. He reformed education to respect the preacher and be virtuous. Industry is important in the economic development of the country. But despite the increase in industrial productivity due to new artificial income, the economy weakened due to lack of industrial resources. The aim of this research paper is that he has expressed the reform in his*

*poems that a new law should be enacted for the sale of handicrafts produced in the industry due to the increase in famine and starvation.*

**கருவிச் சொற்கள் (Keywords):** *Society, casteism, superstition, hypocrisy, education, adolescent politics, female education, handicrafts, engineering.*

**ஆய்வுச் சுருக்கம்**

இருபதாம் நூற்றாண்டில் விடுதலை இயக்கத்தின் விடிவெள்ளி நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கம் பிள்ளை ஆவார். தேசியத்தையும் காந்தியத்தையும் தனது இரு கண்களாக போற்றியவர். தேசியக் கவிஞர், காந்தியக் கவிஞர், அரசவைக் கவிஞர் என்னும் பல்துறை ஆளுமையாக திகழ்ந்தவர். பாரத தேசத்தில் சமுதாய சீர்திருத்தவாதிகளான பாரதியார், ராஜாராம் மோகன்ராய், இராமகிருஷ்ண பரமஹம்சர், விவேகானந்தர் முதலியோரின் புரட்சி கருத்துகளால் ஈர்க்கப்பட்டு தாய்நாட்டின் மீதும் தாய்மொழியின் மீதும் பற்றுக்கொண்டு சமுதாயத்தை சீர்திருத்த பல கவிதைகளைப் படைத்தார். சமுதாயத்தில் நிலவிய சாதி, மூடநம்பிக்கை, மது, கல்வி, கைத்தொழில் ஆகியவை குறித்து சீர்கேடுகளான ஒழுங்கற்ற முறைகளையும் மாற்றுவதற்கான நடவடிக்கையும் அவர்தம் கவிதைகளில் வெளிக்கொணர்ந்தார். சாதி என்னும் பெயரைக் கொண்டு பல வன்முறைகளை இளைத்த மூடர்களிடத்தில் சாதி என்பது மனித சாதி ஒன்றே. அத்தகைய சாதிக்குள் தீண்டாமை என்பது இல்லை. அத்தீண்டாமை எனும் நோயை இந்நாட்டை விட்டே விரட்ட வேண்டும் என்றார். மனைவி மக்கள் என மகிழ்ச்சியோடு வாழ்ந்த கூட்டுக்குள் மது என்ற மிருகம் நுழைந்ததால் துன்பமும் துயரமும் கொண்டு நாள்தோறும் கஞ்சியின்றி வாடித் தவித்தனர். கீழ்த்தட்டு மக்களைச் சீர்திருத்த மூலை முடுக்குகளில் விற்கப்படும் கள்ளினை தடை செய்ய கோரி மறியலில் ஈடுபட்டு அதில் வெற்றியும் கண்டார். பகுத்தறிவை மறந்து மூடநம்பிக்கை என்ற பாழ்குழியில் விழுந்த மக்களுக்கு அறிவுரை புகட்டி ஊக்க மூட்டினார். நாட்டின் அடிப்படை தேவைகளுள் ஒன்று கல்வி. அத்தகைய கல்வி ஆண், பெண் என்ற பாகுபாடின்றி சமமாக கற்றுக் கொடுக்க வேண்டும். கல்வி கற்கும் பருவத்தில் கல்வி சிந்தனை தவிர பிற தீய வரக்கூடாது என்றார். ஆசானை மதித்து நல்லொழுக்கத்தோடு இருத்தல் வேண்டும் என்று கல்வி சீர்திருத்தம் செய்தார். நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் கைத்தொழில் முக்கியத்துவம் வாய்ந்தது. ஆனால் புதிய செயற்கை வரவால் தொழில் வளம் பெருகினாலும் கைத்தொழில் வளம் குன்றிய பொருளாதாரம் நலிவடைந்தது. இதனால் பஞ்சம் பட்டினி அதிகரித்து வந்ததால் கைத்தொழிலில் உருவாகும் கைவினை பொருள்கள் விற்பனை செய்வதற்கு புதிய சட்டம் இயற்றல் வேண்டும் என்ற சீர்திருத்தத்தை தம் கவிதைகளில் வெளிப்படுத்தியுள்ளார் என்பதே இந்த ஆய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

**கருவிச் சொற்கள் (Keywords):** சமுதாயம், சாதி மறுப்பு, மூடநம்பிக்கை, கள்ளுண்ணாமை, கல்வி, இளம் பருவ அரசியல், பெண் கல்வி, கைத்தொழில், எந்திரத் தொழில்.

**முன்னுரை**

**தமிழனென்று சொல்லடா!**

**தலைநிமிர்ந்து நில்லடா! (நா.க.பா.249:1-2)**

என்று அறியாமையில் இருண்டு கிடந்த மக்களின் உள்ளங்களில் வெளிச்சத்தைக் கொண்டு வந்தவர் நாமக்கல் கவிஞர். எழுத்தாளர், கட்டுரையாளர், திறனாய்வாளர், இதழாளர் எனப் பன்முகத் திறன் கொண்டவ வித்தகர். இலக்கிய உலகில் நாடும் மொழியும் நமது இரு கண்கள் என்று போற்றிய பாரதியின் பற்றாளன், காந்தியின் பித்தன். தமிழ்நாட்டு மக்களின் துன்பத்தைப் போக்க காந்தியைப் போல் அகிம்சை வழியைப் பின்பற்றி குரல் எழுப்பியவர். எளிய சந்த நடையை கையாண்டு அடித்தட்டு மக்களின் வாழ்வியல் இன்னல்களைச் சீர்படுத்த நீங்காது உழைத்தவர். இத்தகைய புகழுக்கு பாத்திரமான கவிஞர் பல இன்னல்களுக்கிடையே புரையோடி கிடந்த சாதி, மூடநம்பிக்கை, மது, கல்வி, கைத்தொழில் ஆகியன குறித்து ஏற்பட்ட இன்னல்களுக்கு தீர்வு காண முனைந்தார் என்பது பற்றியே இக்கட்டுரை ஆய்வு செய்கிறது.

**சமுதாயம்**

சமுதாயம் என்பது மனித இனத்தில் காணப்படும் உறவு நிலைகளின் அமைப்பு முறையாகும். ஒரு குறிப்பிட்ட பகுதியில் மக்கள் ஒன்று சேர்ந்து கூட்டமாக வாழும் கூட்டுத் தொகுதியாகும். ஆங்கிலத்தை இதனை “Society” என்பர். சமுதாயம் என்ற சொல் “மக்களின் திரள், பொருளின் திரள், கோயில் நிர்வாக அதிகாரிகளின் கூட்டம்” என்று தமிழ் லெக்சிகன் பொருள் தருகிறது.

**நாமக்கல்லார் கண்ட புதிய சமுதாயம்**

மானிட சமுதாயம் தோற்றம் பெற்ற காலத்தில் தனது தேவைக்காக குழுவாகவும், கூட்டமாகவும் இமைணந்து வாழத் தொடங்கியது. இத்தகைய சமுதாய நாகரிக வளர்ச்சி ஏற்பட்டு, ஆண், பெண் என்ற உணர்வோடு வாழக் கற்றுக் கொண்டது. இதனைத் தொடர்ந்து பண்பாடு, கலாச்சாரம், நாரிகம், பொருளாதாரம் போன்ற அமைப்புகளைக் கொண்டு உருவானது. இவ்வாறு சுற்றுப்பாதையில் வலம் வந்த மனித சமுதாயம் பத்தொன்பது இருபதாம் நூற்றாண்டில் தொடக்கத்தில் அந்நியரின் ஆட்சிப் பிடியில் அடிமையுண்டு கிடந்த அக்காலத்தில்தான் அவதரித்தவர் நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கம் பிள்ளை. இவர் தன் நாட்டு மக்களின் நலனை கருத்தில் கொண்டு அவர்கள் படும் துன்பங்களையும் அவலங்களையும் அகற்ற எண்ணி புதிய சமுதாயத்தை காண விரும்பினார். நாட்டில் நிலவியுள்ள இளம், மொழி,

மதம் என்பவை வேற்றுமையாக காணப்பட்டாலும் ஒற்றுமை என்ற சமதர்ம கொள்கையை நிலைநாட்டி மக்களின் அவலங்களை சீர்ப்படுத்த முனைந்தார். அடித்தட்டு மக்களின் ஏற்றத் தாழ்வுகளை சீர்படுத்திட தன் கவிதை எனும் கைவினை ஏற்றி பிடித்து சாதி, மூடநம்பிக்கை, கள்ளுண்ணாமை, கல்வி, குழந்தை மணம், தீண்டாமை ஆகியவை குறித்து ஏற்பட்ட எதிர்த்து குரல் சீர்கேடுகளைக் கொடுத்தார். பாரத தேசத்தை காக்க போராடிய பாரதியின் தாக்கம் நாமக்கல் கவிஞரிடம் பரவலாகவே இருந்தது. பாரத நாட்டில் பிறந்த நாம் அனைவரும் ஒரே குடியில் பிறந்தவர்கள் எல்லோரும் ஓரினம் என்று கூறிய பாரதியின் சமுதாய உணர்வை,

**எல்லாரும் ஓர் குலம் எல்லாரும் ஓரினம்**

**எல்லாரும் இந்திய மக்கள் (பா.க.பா.17:23-24)**

என்ற கவிதையில் ஒற்றுமை உணர்வை வளர்க்க முற்பட்டார். கவிஞர் வறுமையும் ஏழ்மையும் இல்லாத சமுதாயத்தை காண விரும்பினார். நாட்டில் ஏற்பட்ட மாற்றங்களை சீர்ப்படுத்துவதற்கு புரட்சி வேண்டும். ஆனால் அந்தப் புரட்சியானது எவரையும் துன்புறுத்துக்கூடிய போர் முறையாக இருக்கக் கூடாது என்று சிந்தனைக் கொண்டார். உள்ளத்தில் நிலைக் கொண்டிருந்த புதிய சமுதாயமானது எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை பட்டியிலிடுவதற்கு கவிஞர் "புதிய சமுதாயம்" என்ற தலைப்பில் நாட்டில் உள்ள மக்களை பணமே ஆள்கிறது. அந்தப் பணம் ஏழை எளியோரின் பசியைப் போக்க வேண்டும். மேலும் பணக்காரன் கொண்ட பணப்பசியையும் தீர்க்க வேண்டும் என்பதை,

**பாட்டாளி மக்களது பசிதீர வேண்டும்**

**பணமென்ற மோகத்தின் ஆசை தீர வேண்டும் (நா.க.பா.164:1-2)**

என்று பண மோகத்தின் ஏற்றத்தாழ்வினை எடுத்துரைத்தார். ஒருவன் தான் மட்டும் சுகமாக வாழ பிறரின் துன்பத்தை கண்ணால் கண்டும் அதை காணாமல் இருப்பது இனி இங்கு இல்லை. உடலும் உள்ளமும் வெவ்வேறாக இருந்தாலும் பசி, தாகம் என்பது அனைவருக்கும் ஒன்று தானே என்ற கேள்விகளில் மக்கள் மனதில் சமுதாய சீர்திருத்தத்தை விதைத்தார்.

**வீட்டோடு தான்மட்டும் சுகமாக உண்டும்**

**வேற்றுள்ளோர் துன்பங்கள் கண்ணாரக் கண்டும்**

**நாட்டோடு சேராத தனிபோக உரிமை**

**நடவாதிங் கினியென்று நாமறிதல் பெருமை (நா.க.பத.98:5-8)**

என்றார்.

**சமுதாய சீர்திருத்தக் கருத்துக்கள்**

சமுதாய சீர்திருத்தம் என்பது சமூகத்தில் நிலவுகின்ற தவறுகள், தீமைகள் போன்ற அநீதிகளை அகற்றி மேம்பட்ட நிலையை அடைய வழி வகுப்பதாகும். இத்தகைய செம்மை நிலையை உருவாக்கி மக்களிடையே சமத்துவத்தை நிலைநாட்ட வேண்டும் என்பதை

அறிஞர்கள் பலர் தம் படைப்புகள்வழி எடுத்துரைத்துள்ளனர். சீர்திருத்தம் ஏன்? அவை எவற்றிற்கு தேவை? என்பதை பற்றி குறிப்பிடுகையில்,

> “சீர்திருத்தம் எவ்வுலகுக்கு தேவை? அஃறிணை உலகுக்கா? உயர்திணை உலகுக்கா? முன்னையதற்குத் தேவையில்லை; பின்னையதற்குத் தேவை ஏன்? அஃறிணை உலகிற்குப் பகுத்தறிவு விளங்கித் தோன்றும் வாய்ப்பு அமையவில்லை. உயர்திணை உலகுக்கு அவ்வாய்ப்பு அமைந்துள்ளது. அதனால் முன்னையது இயற்கையோடியைந்து வாழக் கடமைப்பட்டுக் கிடக்கிறது. பின்னையது இயற்கையோடியைந்து வாழினும் வாழும் அதை விடுத்து வீழினும் வீழும் இவ்வியல்புடைய உயர்திணை உலகுக்குச் சீர்திருத்தம் தேவையாகிறது” (பக்.818-819)

என்று திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புகள் என்ற நூலில் எடுத்துரைத்துள்ளார்.

**ஈ.வெ.ரா. பெரியார்**

> “சீர்திருத்தங்கள் மக்களுக்கு ஒழுக்கம் கற்பிக்கவும் அறிவை வளர்க்கவும் உயிர்களிடத்து அன்பும் இரக்கமும் காட்டவும் சமத்துவத்தையும் சுயமரியாதை உணர்ச்சியையும் அதிகப்படுத்தவே அமைய வேண்டும்” (ப.92)

என்று ஆனைமுத்து குறிப்பிடுவதாக திரு.வி.க. எடுத்துக் கூறியுள்ளார்.

**சமுதாயச் சீர்திருத்தம் இளைஞர்களின் பங்கு**

உலக மாற்றத்திற்கு உந்து சக்தியாக இருந்து தன்னார்வத் தொண்டு புரிந்து புதிய வரலாற்றைப் படைக்கும் ஆக்க உணர்வு இளைஞர்களிடமே உள்ளது. ஏனெனில் சமுதாய முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் இளைஞர்களின் பங்கு மிக இன்றியமையாததாகும். புதிய சிந்தனையும் எதிர்கால நோக்கும் கொண்ட இவர்களை பாரதி விரைவில் விரைந்து வா என்று கூறியதை,

**இளைய பார தத்தினாய் வா வா வா**
**எதிரி லாவ லத்தினாய் வா வா வா (பா.க.16:49-50)**

என்று பாரதத்தை காக்க வரவேற்கிறார். இத்தகைய தாக்கம் பெற்ற நாமக்கலாரும் தம் கவிதையில் “இளந்தமிழனுக்கு” என்ற தலைப்பில் இளந்தமிழா உன்னை காண இன்பம் பெருகுது; இந்நாள் வரைக்கும் எனக்கிருந்த துன்பம் இப்பொழுது குறைந்துள்ளது. தளர்ந்த என் உள்ளம் தைரியம் கொண்டது. இந்நாட்டில் குறையேதும் இல்லாமல் சேவை செய்து மகிழ்வாய். நம் நாட்டை ஆண்ட சேர சோழ பாண்டியரை கண்டது போல் உன்னை கண்டு மகிழ்ச்சி கொண்டேன். பணம் பதவி உள்ளோரிடம் பயம் கொள்ளாமல் தவறு செய்வோரை கண்டித்து உரைக்க வேண்டும். ஏழை எளியோரை ஆதரித்து இனிய தமிழ்மொழியில் உரையாடி மாநிலத்தில் அனைவரும் கண்டு மகிழுமாறு சேவை செய் என்றுரைத்ததை,

**இழிகு லத்தார் என்று சொல்லி**

**இகழ்ந்தி டாமல் எவரையும்**

**மணமி குந்தே இனிமை மண்டும்**

**தமிழ் மொழி யால் ஓதிந்**

**மாநி லத்தில் எவருங் கண்டு**

**மகிழு மாறு சேவைசெய் (நா.க.பா.20:60-53)**

என்ற கவிதை எடுத்துக்காட்டுகிறது. நாட்டு மக்களிடத்தில் உண்மையை பரப்பி ஊனத்தனமான வாழ்வை உதறி தள்ள உரைத்திடுவாய். கூடிக் கூடி கதைகள் பேசுவதை விடுத்து கொள்கை உண்டு என்பதை விளக்குவாய். தமிழன் என்ற பெருமையோடு தலைநிமிர்ந்து உலகெங்கும் தொண்டு செய்ய செல்லடா! அமிழ்தம் என்ற தமிழ்மொழியை உலகமெலாம் பரப்புவாய் என்று இளைஞர்களை உற்சாகப்படுத்துவதை,

**தமிழ னென்ற பெருமை யோடு**

**தலைநி மிர்ந்து நில்லடா!**

**தரணி யெங்கும் இணையி லாஉன்**

**சரிதை கொண்டு செல்லடா! (நா.க.பா.20:80-83)**

என்னும் கவிதை வரிகள் சுட்டுகிறது.

**சாதி மறுப்பு**

**பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா**

**செய்தொழில் வேற்றுமை யான் (குறள்.972)**

என்று வள்ளுவம் காட்டுகிறது. ஆனால் இவ்வுலகில் படைக்கப்பட்ட மானிட பிறவிகள் எடலால் ஒத்தவர்கள் என்றாலும், நிறம், இனம், சாதி என்ற அடிப்படையில் தீண்டத்தகாதவர்கள் என்று சமுதாய அமைப்பினரால் புறந்தள்ளப்படுகின்றனர். இத்தீண்டாமையால் ஒரு சமூக குழு மற்றொரு சமூக குழுவிடமிருந்து ஒதுங்கி வாழும் தன்மைக் கொண்டதாகும். இத்தகைய பாகுபாட்டினை தகர்த்தெறிந்து உலக ஒற்றுமைக்காக சமத்துவம் சகோதரத்துவம் என்ற நல்லறத்தை வளர்த்தெடுக்க எண்ணிய பாரதி குழந்தைகளிடத்தில்,

**சாதிகள் இல்லையடி பாப்பா! — குலத்**

**தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம் (பா.க.15)**

என்று அறவுரை புகட்டினார்.

தீண்டாமை என்னும் நோய் தொற்று நோய். நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டு செல்லும் தன்மை உடையது. அதை தடுத்து நிறுத்திட வேண்டும். மனித மக்களிடத்தில் தாழ்வு

மனப்பான்மையை உருவாக்கி சீர்குலைப்பது தீண்டாமையின் செயலாகும். ஆதலால் சாதிபாகுபாட்டால் இவ்வுலகம் அழிவதற்கு முன் தீண்டாமை எனும் கொடிய நோயை நாட்டை விட்டே ஓட்ட வேண்டும் என்று கவிஞர் கூறியதை,

**ஓட்டடா! ஓட்டடா!**

**நாட்டைவிட்டே ஓட்டடா!**

**தீட்டடா மனிதருக்குள்**

**தீண்டலென்ற தீமையே (நா.க.பா.101:1-4)**

என்னும் கவிதை சுட்டுகிறது.

இவ்வுலகில் ஐந்தறிவு படைத்த நாய், குரங்கு, பூனை என்ற காட்டு விலங்குகளை செல்ல பிராணிகள் என்று வீட்டில் பாதுகாத்து வளர்க்கின்றனர். அவைகளை கொஞ்சி முத்தமிடுகின்றனர். ஆனால் ஆறறிவு படைத்த மனிதனை அருகில் வருவதைகூட பொறுக்காது இந்த மடமை சமூகம் செயல்படுகிறது என்பதை,

**நாய்கு ரங்கு பூனையை**

**நத்தி முத்த மிடுகிறோம்;**

**நரக லுண்ணும் பன்றியும்**

**நம்மைத் திண்ட ஒப்புவோம்;**

**ஆயும் நல்ல அறிவுடை**

**ஆன்ம ஞான மனிதனை**

**அருகி லேவ ரப் பொறாமை**

**அறிவி லேபொர ருந்துமோ? (நா.க.பா.101:12-16)**

என்று மனித சாதி மதிக்கப்படாமல் மனிதனுக்கு கொடுக்க வேண்டிய அனைத்தையும் அஃறிணை உயர்களிடத்து ஊட்டி வளர்க்கிறார்கள் என்று உரைத்துள்ளார். இக்கருத்திற்கிணங்க மக்கள் கவிஞராகிய பட்டுக்கோட்டையாரும் இயற்கையின் அமைப்பை சுட்டிக்காட்டி மக்களிடையே ஒற்றுமை வளர்க்க முற்பட்டதை,

**உச்சி மலையிலே ஊறும் அருவிகள்**

**ஒரே கடலிலே கலக்குது**

**ஒற்றுமையில்லா மனிதகுலம்**

**உயர்வும் தாழ்வும் வளர்க்குது (பட்டு.சுந்.பா.112)**

என்று சிந்திக்க வைக்கிறார். இவ்வுலகில் படைக்கப்பட்ட உயிரினங்களில் மனிதனைத் தவிர மற்ற உயிர்கள் எல்லாம் ஒற்றுமையோடு வாழ்கின்றன என்பதை உணர்த்துகிறார்.

**மூடநம்பிக்கை**

மக்கள் காலங்காலமாக சில பகுத்தறிவற்ற செயல்களில் நம்பிக்கை கொண்டு வாழ்ந்து வருகின்றனர். கண்மூடித்தனமான பழக்கவழக்கங்களையும் சடங்கு முறைகளையும் பொய்மைகளையும் சாத்திரங்களையும் நம்பினர்.

**பழையன கழிதலும் புதியன புகுதலும்**
**வழுவல கால வகையினா னே (நன்.462)**

என்று நன்னூலார் கூறும் கருத்திற்கிணங்க பகுத்தறிவைத் தூண்டும் புதுமைகளைச் சிந்திக்க முழக்கமிடுகிறார் கவிஞர்.

இல்லறத்தை விட்டு துறவறம் நாடி காடுகளிலும் குகைகளிலும் வாழ்ந்த சித்தர்கள் நோய்நொடி இல்லாமல் பகுத்தறிவோடு இருந்தனர். ஆனால் இன்று நாட்டில் பலவாம் நிறைந்து இருக்கையில் பகுத்தறிவைப் பற்றி அறிந்தும் புதுப்புது நோய்களால் புழுக்கள் போல் மடிகின்றனர். அதிலிருந்து மீண்டு வர வழி தேடாமல் விதியென வாதம் பேசி கொண்டு காலத்தை வீணாக கழிக்கின்றனர். அவ்வாறு இருப்பது நன்றோ? என்று பாரத தேச மக்களிடத்தில் வினவினார்.

**விதியென வாதம் பேசி**
**வீணரா யிருத்தல் நன்றோ? (நா.க.பா.122:15-16)**

என்று மக்களிடத்தில் காணும் பழமையை நீக்கி புதிய சிந்தனை உருவாக்க முனைந்தார்.

**கள்ளுண்ணாமை**

**துஞ்சினார் செத்தாரின் வேறல்லார் எஞ்ஞான்றும்**
**நஞ்சுண்டார் கள்ளு பவர். (குறள்.926)**

என்ற குறளில் கள்ளினை “நஞ்சு” என்கிறார் வள்ளுவர். இக்கருத்திற்கிணங்க நாமக்கல் கவிஞரும் குடிப்பதால் ஏற்படும் தீமைகளையும் அதனை தடுப்பதற்கான வழிமுறைகளையும் எடுத்துக் கூறுகிறார். ஆனால் இன்றைய சமுதாய சூழலில் மது பெரும் தீங்கினை விளைவிக்கிறது. மனித மாண்புகளை சீர்குலைத்து நாட்டிற்கும் வீட்டிற்கும் கேட்டினை ஏற்படுத்துகிறது. வளர்ந்து வரும் மக்கள் தொகையில் இளைஞர்களும் மதுபழக்கத்தால் பாதிக்கப்படுவதால் நாட்டில் பொருளாதார வளர்ச்சியும் நலிவடைகிறது. மேலும் மதுவினால் மனிதர்களின் உடலும் உள்ளமும் பாதிப்படைக்கிறது என்றே அறிந்தும் அரசே மதுவை விற்பனை செய்கிறது. இன்று மதுவிலக்கை கொண்டு வர யாரும் முற்படவில்லை. அன்றயை சமூகத்தில் காந்தியடிகள் மதுவிலக்கு கொள்கையை மக்களிடத்தில் கொண்டு செல்ல முயன்றார். கவிஞரும் காந்தியின் அக்கொள்கையை ஆதரித்து கவிதைகள்வழி மது விற்பனைக்கு எதிர்ப்புக் குரல் கொடுத்தார். தினந்தோறும் பாடுபட்டு உழைக்கும் கீழ்தட்டு மக்களின் தன் கூலியை கள்ளுக்கடையில் பறிகொடுத்து விட்டு வீதியில் சுருண்டு கிடக்கிறார்கள் என்னும் நிலைமையை கருத்தில் கொண்ட நாமக்கல் கவிஞர் குடிப்பதால் ஏற்படும் தீமைகளையும் அதனை தடுப்பதற்கான வழிமுறைகளையும் எடுத்துக் கூறகிறார்.

“குடிப்பதைத் தடுப்போம” என்ற கவிதை தலைப்பில் குடிப்பதைத் தடுப்பது கோடி புண்ணியம், இக்குடியால் மனைவி மக்களை துன்புறுத்தி பித்தர் என்றும், பேய் என்றும், புத்திக்கெட்டு உடல் வலிமையிழந்து நிற்பது இந்த கள்ளினால்தான். தினந்தோறும் உழைக்கும் கூலியை பறித்து கொண்ட கள்ளினை இந்த நாட்டை விட்டே விரட்டுவோம் என்றார்.

கஞ்சிக்காக காத்திருக்கும் மனைவி மக்கள் பசியோடு கிடக்கும் அவலம் இந்த கள்ளினால்தான். உடல் மெலிந்து, கைகால் நடுக்கம் கண்டதும் இந்த கள்ளினால்தான் என்று மதுவின் பழக்கத்தினால் வரும் கொடுமைகளை,

**மெய்தளர்ந்து மேனிகெட்டுப்**
**போனதிந்தக் கள்ளினால்;**
**கைநடுங்கங் கால் நடுங்கங்**
**கண்ட திந்தக் கள்ளினால் (நா.க.பா.107:21-24)**

என்னும் கவிதையில் விளக்குகிறார். மது விற்பது குற்றம் என்பது தெரிந்து அதனை விற்கவிட்டு வேடிக்கை பார்க்கும் விந்தை மனிதர்கள் இருப்பது இந்த நாட்டிலேதான். தன்னுடைய சுகத்திற்காக மட்டும் கள்ளினை உண்டு காலங்களைக் கழிக்கும் மூடர்களை எண்ணி முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்று எண்ணிய காந்திய கொள்கை நெறியில் நடந்து காந்தியடிகளுடன் மதுவிலக்குப் போராட்டங்களில் களமிறங்கினார். கள்ளுக்கடை மறியல்களை நாடெங்கும் நடத்தினார். 1937இல் ராஜாஜி சென்னை முதலமைச்சராக இருந்தபொழுது மதுவிலக்கை சேலத்தில் தான் முதலில் அமல்படுத்தினார். அதனைக் கண்ட நாமக்கல்லாரும் கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்டார்.

"நாமக்கல் கவிஞரும் கள்ளுக்கடை மறியலை நாமக்கல்லில் முன் நின்று நடத்தி தீரர் சத்யமூர்த்தியின் பாராட்டைப் பெற்றார்" (ப.82)

என்று கி.ர.அனுமந்தன் நாமக்கல் கவிஞர் கவிதைகளில் தேசியம் காந்தியம் என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். குடிப்பழக்கத்தால் ஏற்படும் கொடுமைகள் யாவும் இனி ஒழிந்தன என்ற களிப்பில் நாமக்கல்லார் "விட்டது சனியன்" என்னும் கவிதை தலைப்பில்,

**விட்டது சனியன், விட்டது சனியன்**
**விட்டது நம்மை விட்டதடா! (நா.க.பா.102:1-2)**

என்று கள்ளுக்கடை மூடப்பட்டதால் உற்சாகம் கொண்டு மகிழ்ச்சியடைந்தார். கள்ளை விட்டொழிப்பதால் என்னென்ன நன்மைகள் ஏற்படும் என்பதை பட்டியலிடுகிறார். "கள்" என்ற பேய் செத்தது. இத்தினம் முதல் நமக்கு இனி தீபாவளி தான். கூலியை தொலைப்பதும், தாலியை இழப்பதும், மற்றவர் ஏசுவதும், பேசுவதும், சாலையில் பிணமென கிடப்பதும், மற்றவர் கைகொட்டி சிரிப்பதும், பெற்ற தன் குழந்தைகள் தந்தையை பேயென கண்டு அஞ்சுவதும், வாய் குளறுவதும், உற்றார், உறவினர் உமிழ்த்திடுவதும், நகைப்பதும் இனி இல்லை என்று தம் கவிதையில்,

**பெற்றதன் குழந்தைகள் சுற்றி நடுங்கப்**
**பேயெனும் உருவொடு வாய்குளற**
**உற்றவர் உறவினம் காறி உமிழ்ந்திட**
**உணரார் நகைப்பதும் ஒழிந்ததினி! (நா.க.பா.102:20-24)**

என்றார். மனைவி மக்களை துன்புறுத்தி உறவினரால் ஏளனம் செய்ததெல்லாம் போதும் இனி கள்ளினிலிருந்து மீண்டு வருவோம் என்பதை உணர்த்தினார். "பாழும் கள்ளால் பட்டதை நினைத்தால் பதைக்குது நெஞ்சம் கொதிக்குதடி" (நா.க.பா.102:45) என்றார். இத்தகைய கள்ளினை விட்டொழிந்தால் நாட்டிற்கும் வீட்டிற்கும் பல நன்மைகள் ஏற்படும் என்பதை சுட்டிக் காட்டினார்.

### கல்வி

இன்றைய உலகில் இன்றியமையாததாக திகழ்வது கல்வி. ஒருவன் எத்தகைய செல்வம் பெற்றிருந்தாலும் கல்வியே அழியாச் செல்வமாகும். "கற்றவனுக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு" என்ற செற்றொடர் கல்வியின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கிறது. கல்விச் செல்வத்தால் அறிவு, ஆற்றல், நற்பண்பு போன்ற குணநலன்கள் புத்துணர்ச்சி பெறுகின்றன. இத்தகைய கல்வியானது மானுடத்தை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் உந்துசக்தியாக இருக்கிறது. இதனை இலக்கிய இலக்கணங்களும் நீதி நூற்களும் வலியுறுத்துகின்றன. கல்வி செல்வத்தில் எண்ணும் எழுத்தும் வாழும் உயிர்களுக்கு கண்களாகும் என்பதை,

**எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்**
**கண்ணென்ப வாழும் உயிர்க்கு. (குறள்.392)**

என்று வள்ளுவர்.

புறநானூற்றில் ஆரியப்படை கடந்த பாண்டிய நெடுஞ்செழியன் அக்காலத்து மக்களுக்கு கல்வியின் முக்கியத்துவத்தையும் சிறப்பினையும் உணர்த்தும் பொருட்டு,

**உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்**
**பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே. (புறம்.183:1-2)**

என்னும் பாடலில் கல்வியின் முக்கியத்துவத்தை குறிப்பிட்டுள்ளார். சமூகத்தில் ஒரு தனிமனிதன் எவ்வாறு வாழ வேண்டும், எவ்வாறு வாழக் கூடாது என்பதையும் வாழ்வியலுக்கு தேவையான அறங்களையும் கற்று தருவது இக்கல்வியே. ஒருவன் தன் உடலை ஒப்பனை செய்து கொள்வது அழகாகாது. அறிவையும், நற்பண்பையும் அழகுபடுத்துவது கல்வியே. அத்தகைய கல்வியானது பெரும் அழகாகும் என்பதை நாலடியாரும், ‘‘கல்வி அழகே அழகு’’ என்பதை சுட்டிச் செல்கிறது. வாழ்க்கை தத்துவத்தை எடுத்துரைக்கிறது. இத்தகைய சிறப்பு பெறும் கல்வி செல்வத்தை நாமக்கல் கவிஞர் மக்களுக்கு அளிப்பதால் நாட்டில் ஒற்றுமை ஏற்படும். இந்த ஒற்றுமையினால் தான் கல்வியும் கலைகளும் நாட்டில் வளர்ச்சி பெறும் என்பதை,

**கல்வி சிறந்திடும் கூட்டுறவால்**
**கலைகள் நிறைந்திடும் கூட்டுறவால் (நா.க.பா.105:5-6)**

என்னும் தம் கவிதையில் கல்வியின் சிறப்பை எடுத்துரைத்துள்ளார்.

### மாணவனுக்கு கல்வி புகட்டல்

மாதா, பிதா, குரு ஆகிய மூவரும் தெய்வம் என்ற பண்பையும் உரிய தகுதியையும் கற்றுக் கொடுப்பது கல்விக் கூடம். கல்வி கற்க ஏதுவான பருவம் இளமைப் பருவமாகும். ஏனெனில் எந்த துன்பமும் இல்லாமல் எல்லையற்ற ஆர்வத்தோடு எல்லா கலைகளையும் கற்று பயில்வதற்கு உரிய காலமாகும். இந்த பருவத்தை மாணவர்கள் நல்வழியில் பயின்றால் தான் நாமகளான (சரஸ்வதி)யின் அருள் கிட்டும் என்பதை கவிஞர்,

**நல்வழியில் பயன்படுத்தும் மாண வர்க்கே**
**நாமகளின் திருவருளின் நலங்கள் கூடும் (நா.க.பா.253)**

என்கிறார்.

விலைமதிப்பில்லா கல்வியைக் கற்றுக் கொடுக்கும் ஆசானை தந்தையைப் போல் வணங்க வேண்டும். அவர் கூறும் அறிவுரைகளை கேட்க வேண்டும். நாணம் கொள்ளாமல் தன் கருத்தை தெரிவிக்க வேண்டும். தவறு ஏதும் இழைத்தால் அதனை உணர்ந்து ஒப்புக்கொள்ள வண்டும். குருவிடம் தீயச் சொற்களைக் கூறக் கூடாது. இவ்வாறு நற்பண்புகளை கொண்டவனே நல்ல சீடன் என்பதை, ‘‘மாசான வார்த்தையெதும் ஆசான் மாட்டு மறந்தேனும் ஒரு போதும் பேசான்’’ (நா.க.பா.105:13) என்று உரைக்கிறார்.

### இளம் பருவ அரசியல்

மாணவ பருவம் என்பது பறவைகள் போல் ஆடிபாடி விளையாடும் பருவமாகுத். அத்தகைய பருவத்தில் கல்வி கற்பதைத் தவிர வேறு எக்காரியங்களிலும் ஈடுபடக்கூடாது. சிறகில்லாத பறவைகள் பறக்க ஆசை கொள்வது போல நல்லவை தீயவை அறியாத மாணவ பருவத்தில் அரசியலில் களமிறங்குவது, அதனைத் தடுத்து அறிவுரை புகட்டும் ஆசானையும் சிலர் ஏளனம் செய்வர். அவ்வாறு செய்வோர் சிறகில்லாத பறவைக் குஞ்சுகளுக்கு ஈடானவர் என்பதை,

**கல்விகட்டும் அரசியலின் விவகா ரத்தில்**
**கலந்துகொள்ளக் கூடாது; கண்டிப் பாகப்**
**பட்ச முடன் அதைத் தடுக்கும் ஆசான் மாரைப்**
**பரிகசிப் போர் சிறகில்லாப் பறவைக் குஞ்சே (நா.க.பா.253:21-24)**

என்றார். இன்றைய சூழல் மாணவர்கள் அரசியல் செயல்களில் ஈடுபடுவதை கவிஞர் அக்காலச் சமுதாய சூழலில் எடுத்துக் காட்டியுள்ளார். மாணவனிடத்தில் எப்பொழுதும் குருபக்தி இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாமல் ஆசானையே தாக்கி எதிர்த்து உரைப்பதும் தனக்கு தான் அனைத்து உரிமையும் உள்ளது போல் சிறுவயதில் ஆணவம் கொள்வதும் கீழ்புத்தி கொண்ட மாணவனின் செயலாகும். அத்தகைய செயலுடையவனை பள்ளியில் சேர்த்தால் கோவிலாக கருதும் கல்விக் கூடமும் சீரழியும் என்பதை,

**சிறுபுத்தி மாணவரைச் சேர்ந்துவிட்டால்**

**சீரழியும் கள்ளிகளின் சிறந்த சேவை (நா.க.பா.253:31-32)**

என்று கல்வியின் மதிப்பை அறியாத மூடர்களின் செயல்களை சீர்திருத்த முற்படுவதை காணமுடிகிறது.

**பெண் கல்வி**

பெண்கள் அறியாமை இருளிலிருந்தும் அடக்குமுறையிலிருந்தும் விடுதலை பெறுவதற்குக் கல்வியைக் கற்றுக் கொடுக்க வேண்டும். அது அவர்களின் உரிமையாகும். நாட்டின் முன்னேற்றத்திற்கும் தன்னையடுத்து வரும் தலைமுறைக்கும் வளர்த்தெடுப்பதற்கும் அவசியமானதாகும். இத்தகைய பெண் கல்வியைக் குறித்து இவ்வையத்தில் பாடாதவர் எவருமிலர். சங்க காலத்தில் பெண் கல்வியில் சிறந்து விளங்கிய ஔவையார், வெள்ளவீதியார், மாசாத்தியார், பொன்முடியார் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாக, ஆண்பாற் புலவர்களுக்கு இணையாக சம உரிமைப் பெற்று கல்வியில் சிறந்தவர்களாக இருந்துள்ளனர். ஆனால் இருபதாம் நூற்றாண்டு சமுதாய அமைப்பில் பெண்களுக்கு கல்வி மறுக்கப்பட்ட நிலையில் அதை எதிர்த்து ஆண், பெண் சமத்துவத்தை போற்றிய புகழ் முதலில் பாரதியே சாரும். அதன்பின் தோன்றிய பாரதிதாசன், கவிமணி, வாணிதாசன், நாமக்கலார் ஆகியோர் பெண் உரிமையை வளர்த்தெடுக்க குரல் கொடுத்தனர். பாரதியார் "பெண்ணறிவை வளர்ந்தால் வையம் பேதமை யற்றிடுங் காணீர்" என்று பெண் கல்வியை வளர்க்கப் பாடினார். பெண் கல்வி ஒன்றை கற்று விட்டால் வாழ்வினில் செம்மையாய் செழித்து நிற்பாள். வீட்டு வேலைக்கு பெண் உரிமையானவள் அல்ல வெளியுலக வேலைக்கும் தகுதியானவள். ஆகையால் பெண் கல்வி வேண்டும். அதற்கொரு சட்டம் இயற்ற வேண்டும் என்பதை பாரதிதாசன்,

**தமிழ்த்திரு நாடு தன்னில்**

**இருக்கு மோர் சட்டந் தன்னை**

**இமைப் போதில் நீக்க வேண்டில்**

**பெண் கல்வி வேண்டும் யாண்டும் (பட்டு.சுந்.பா.128)**

என்று பெண் கல்வியை முன்னெடுக்க குரல் எழுப்பினார். இக்கருத்துக்கிணங்க நாமக்கல் கவிஞர் தம் கவிதையில் பெண்களும் சமுதாயத்தில் உயர்தரப் பட்டம் பெற்று வெளிநாடுகளுக்கு சென்று அங்குள்ள நாகரிகங்களையும் பழக்கவழக்கங்களையும் கற்று மென்மையான மனதைக் கொண்டு களையில்லாதப் பயிர்களைப் போல் செழித்து நிற்க வேண்டும் என்பதை,

**வெள்ளையர் நாகரிக**

**விதங்களும் விரும்பிக் கற்றுக்**

**கள்ளமும் கபடு மின்றிக்**

**களையிலாப் பயிர்போல் நின்றாள்**

என்று பெண் கல்வியில் உள்ள தொலைநோக்குப் பார்வையை மக்களிடத்தில் விதைத்துள்ளார்.

**கைத்தொழில்**

இன்றைய சமுதாய அமைப்பில் வளர்ந்து வரும் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியில் பல்வேறு சாதனங்கள் பெருகி கொண்டே இருக்கிறது. இத்தொழில்நுட்ப வளர்ச்சியும்

கைத்தொழில் அழிந்து விடக்கூடாது என்பதில் கவிஞர் சீர்திருத்த சிந்தனையை முன்வைக்கிறார். கிராமப்புறங்களில் கைத்தொழில் மகிமை வாய்ந்ததொன்றாகும். இயற்கையாக கிடைக்கக்கூடிய களிமண்ணைக் கொண்டு பல கைவினைப் பொருட்கள் வீட்டு உபயோக பொருட்கள் செய்யப்பட்டு விற்கப்படுகின்றன. இத்தகைய கைத்தொழிலை நாம் பாதுகாக்க வேண்டும். மனிதன் நாகரிகம் பெற்று தொழில் முறை செய்து தனியொரு பண்பாட்டை வளர்த்தெடுத்தான். மண்ணால் குடங்கள் செய்வதும், வீட்டுமனைப் பொருட்கள் தயாரிப்பதும், வீட்டைச் சுற்றி பசுமையோடு ஆடு, மாடு வளர்த்து பால், தயிர் எடுப்பதும் என இயற்கையோடு சார்ந்து தொழில் புரிந்து வந்தனர். பண்டைய நாகரிக தொழில் வளத்தில் குசவன், கொல்லர், தச்சர் போன்றோர் கைத்தொழில் துறையின் முன்னோடிகள் ஆவர். அவர்களின் தொடக்கத்தால் நாட்டில் மக்கள் வண்ண உடையணிகின்றனர். அவர்கள் இல்லையென்றால் மண்பாண்டங்கள், வண்ண உடைகளும் கிடைத்திருக்குமோ? கொல்லரும் தச்சரும் இல்லையென்றால் மாட மாளிகையை கட்டி இருக்க முடியுமா? என்பதை,

**நெசவுக் காரர்கள் நெய் யாமல்**
**நிலத்தவர் உடைக்கென் செய்வார்கள்?**
**குசவன் செய்திடும் பாண்டமன் றோ**
**குடித்தனம் நடத்திட வேண்டுமென்றும் (நா.க.பா.259:13-16)**

என்று கவிதை உணர்த்துகிறது. இவ்வாறு கவிஞர் நாட்டின் வளங்களுள் கைத்தொழில் வளமும் சிறந்து விளங்கியதை எடுத்துரைத்துள்ளார்.

**எந்திரத் தொழில்**

இவ்வாறு கைத்தொழிலால் வளம் பெற்று வந்த நாட்டில் மேலை நாட்டினரின் எந்திரங்கள் பெருக்கம் கொண்டன. அவ்வாறு பெருகுவதால் கீழ்த்தட்டு மக்களுக்கு வேலையில்லா திண்டாட்டமும் பஞ்சமும், பட்டினியும் ஏற்படுகிறது. எந்திர ஆலைகள் பெருக்கத்தினால் ஏழைகளின் மனம் பரிதவித்து பொருளாதார நிலையும் நலிவடைகிறது என்னும் கருத்தை,

**எந்திரம் புகுந்தது தந்திரம் மிகுந்தது**
**ஏழைகள் பிழைத்திட வழியில்லை (நா.க., பா.261:9-10)**

என்று எந்திரங்களால் ஏழைகள் படும் அவலங்கள் சித்திரிக்கப்பட்டுள்ளது. எந்திரங்கள் உருவானதால் ஆயிரமாயிரம் தொழிலாளர்கள் ஓலமிட்டு வேதனையுறும் அவலம் நாளுக்கு நாள் அதிகரித்து விட்டது. இந்த நிலையில் உணவுத் தட்டுப்பாடும் ஏற்படுகிறது. இதனால் மக்கள் சாலை மறியல், வேலை நிறுத்தம் செய்வது என முற்படுகின்றனர். எனில் இதற்கொரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். கடினமான பொருட்களை எந்திரம் தயாரித்தலும் சிறிய சிறிய பொருட்களை கைத்தொழிலால் செய்வதற்கு சட்டம் ஒன்று இயற்றப்பட வேண்டும். இனிமேல் உண்ணும் உணவும் அணிந்திடும் ஆடைகளும் கைத்தொழிலால் செய்யப்பட்டதாக இருக்க வேண்டும். இல்லையென்றால் நாட்டில் கொடிய பஞ்சம் ஏற்படும் என்பதை,

**சோறும் துணியும் யாரும் இனிமேல்**
**சுத்தமும் கைத்தொழில் பொருள் வாங்கக்**
**கூறும் சட்ட கட்டளையின் றேல்**
**கொடுமையும் பஞ்சமும் குறையாது (நா.க.பா.261:33-36)**

என்று கவிதையால் சுட்டிச் செல்கிறார்.

**முடிவுரை**

கவிதை உலகில் முத்திரை பதித்த நாமக்கல் கவிஞர் பாமர மக்களின் வாழ்வியலை சீர்கெடுக்கும் தீய வழக்கங்களை முறியடிக்க தம் பாடல்கள் வழி வடிவமைத்தார். சமுதாயத்தின் மீதும் பற்றுக் கொண்டு மக்களின் நல்வாழ்வுக்கு வழிகாட்டியுள்ளதை இக்கட்டுரைவழி அறியமுடிகிறது.

**துணைநூற் பட்டியல்**

அருணன். **முப்பெருங் கவிஞர்கள்.** அகரம், சிவகங்கை, 1994.
அனுமந்தன், கி.ர. **இந்திய இலக்கியச் சிற்பிகள்: நாமக்கல் கவிஞர் பாடல்கள்.** சாகித்ய அக்காதெமி, புதுதில்லி, 2 ஆம் பதிப்பு, 2000.
அனுமந்தன், கி.ர. **நாமக்கல் கவிதைகள் தேசியம் காந்தியம்.** உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1990.
உஷாராணி, சு. **பாரதியார் கவிதைகள்.** வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, 2019.
புலியூர்க் கேசிகன் (உ.ஆ.). **புறநானூறு.** சாரதா பதிப்பகம், சென்னை, 2010.
மகாலிங்கம், ப. **திரு.வி.க.வின் சமுதாய நோக்கு.** செல்வம் பதிப்பகம், வடலூர், 1999.
வரதராசன், மு. (உ.ஆ.). **திருக்குறள்.** கழக வெளியீடு, சென்னை, 1999.
வெள்ளைவாரணர், க. **தொல்காப்பியம் நன்னூல் - சொல்லதிகாரம்.** தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1984.
வையாபுரிபிள்ளை, எஸ். **தமிழ் லெக்சிகன்.** சென்னை பல்கலைக்கழகம், சென்னை, 1982.

### *References*

*Arunan. **Mupperung Kavignarkal**. Agaram, Sivagangai, 1994.*
*Anumanthan, Ki.Ra. **Indiya Ilakkiya Sirpigal: Namakkal Kavignar Padalgal.** Sahithya Academy, New Delhi, Second Edition, 2000.*
*Anumanthan, Ki.Ra. **Namakkal Kavithaigal Desiyam Gandhiyam**. Ulaga Tamilaraichi Niruvanam, Chennai, 1990.*
*Usharani, Su. **Bharathiyar Kavithaikal.** Varthamanan Pathippagam, Chennai, 2019.*
*Puliyoorkesikan (Ed.). **Purananooru**. Saratha Pathippagam, Chennai, 2010.*
*Mahalingam, P. **Thiru.Vi.Ka.vin Samuthaya Nokku**. Selvam Pathippagam, Vadaloor, 1999.*
*Varadarajan, M. (Ed.). **Thirukkural**. Kazhaga Veliyeedu, Chennai, 1999.*
*Vellaivaranar, Ka. **Tholkappiyam Nannool - Sollathikaram.** Tamil University, Thanjavur, 1984.*
*Vaiyapuripillai, S. **Tamil Lexicon**. University of Madras, Chennai, 1982.*

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
ARAN International e-Journal of Tamil Research

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.
வரும் 2026, ஜூலை மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - ஜூலை 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜூலை இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com